
# வடம்



ஆடி - புரட்டாதி 2005

விலை: ரூ. 20

கவிதைகளுக்கான காலாண்டிதழ்

# அவனுக்கான கவிதை

கட்டுகளற்ற மனது
எல்லையற்று வியாபிக்கிறது!
இருண்ட சிறைக்குள்
ஒளியின் பாய்ச்சல்
ஆகா! சுதந்திரம்!

நீ ஒரு கலை
ஆகையினால் தான்
இதயங்களில் வசிக்கிறாய்.

தனிமை நேசிக்கும் உன்னிதயம்
பிணைப்புக்களுக்காகவே
தவமிருப்பதால் மைந்தர்கள்
அவர்தம் விலங்குகளை
உன்னிடம் ஒப்படைத்தனர்.

வலிய விலங்குகளுக்கிடையேயும்,
நிலவறை துயரங்களிடையேயும்
இன்னுயிர் வதைத்துப் பெற்ற
நசிந்த தேசத்தின் வெற்றி
புகழுடை சுதந்திரத்துடன்
ஒவ்வொரு காற்றின் சிறகுகளிலும்
தன்னை கர்வமாய்
கண்டுகொள்கிறது.

வீரனே! உன் சிறைக்கூடம்
ஒரு புனிதஸ்தலம் – நீ
துயர் வடித்திருந்த தரை காணும்
பயணத்தில் அவர்களின்
முதல் சுவடு புறப்படுவதற்கிடையில்
உன் நீள் நாள் கனவாய் – நீ காய்ந்த
நிலம் குளிர்ந்து புற்றரையானால்
உனதடையாளங்கள்
மறக்கப்படலாம்!
மறைக்கப்படலாம்!
உனதிடமிருந்தவாரே
அவர்களுக்காக
கடவுளிடம் மன்றாடுவாய்....!

ஆங்கிலத்தில் - பைரன்(1816)
**தமிழில் - லெ. தினகரன்**

"எழுத்து ஆன்மாவின் ரத்தம்"
கவிதைகள் காலத்தின் உதடுகள்"

வடம்
கவிதைகளுக்கான
இதழ்
மலர்: 1

இதழ்: 3
ஆடி - புரட்டாதி
2005

**ஆசிரியர் குழு**

பா. மகேந்திரன்
இரா. நெல்சன்
வே. தினகரன்

**ஆலோசனை**

ஜெ. சற்குருநாதன்
ம. திலகர்

**ஓவியங்கள்**
அனுர

**அச்சிட்டு வெளியிடுவோர்**
**"குயில்தோப்பு"**
**கலை இலக்கிய ஒன்றியம்**
**காவத்தை.**

தொடர்பு முகவரி:
VADAM
No. 02, Church Road,
Kahawatta. - 70150

**தொலைபேசி**
**0777-592872**
**051-2224716**
**0776-576033**

Kuyilthoappu@yahoo.com

**கட்டுரை**

எஸ்த்தர் லோகநாதன்

**கவிஞன் பதில்கள்**

**கவிதைகள்**

சி. சிவசேகரம்
வே.தினகரன்
பெரியசாமி விக்னேஸ்வரன்
திலகர்
மல்லிகை சி.குமார்
ஆ.புனிதகலா
ஏ.ஷிபானா
மார்க்ஸ் பிரபாகர்
ஆர்த்தி
மு.கீர்த்தியன்
ஜ. பாத்திமா பஸ்நியா
சண்முகம் சிவகுமார்
க.ஆஷா
சூர்ப்பனகை
மாரிமுத்து சிவகுமார்
சிவச்சந்திரன்
இரா.தவேந்திரன்
வேதி

**நேர்காணல்**

மல்லிகை சி. குமார்

**வாசகர் கடிதங்கள்**

# வாசிப்புக் கலாச்சாரமும் மலையகமும்

மனித அபிவிருத்தியில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள், ஆய்வாளர்களை நோக்கில், மக்களின் குறைக்கல்வியும், குறை எழுத்தறிவும் அவர்களின் குறைந்த வாழ்க்கைத் தரத்திற்கு காரணமாகவும், தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சவாலாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இலங்கையின் கல்வி ஜனநாயக வரலாற்றின் எல்லா கால கட்டங்களிலும் அறிவுரிமை பூரணமாய் அங்கிகரிக்கப்படா பிரதேசமாய் மலையகம் ஒதுக்கப்பட்டிருந்தமைக்கு ஒவ்வொரு வளைவுகளிலும் ஆதாரங்கள் இருக்கின்றன. இந்நிலையில் கிடைத்த மிகக் குறைந்த வளங்களை பரிபூரணமாய் பயனுண்டு எழுந்த புத்தி ஜீவிகள், கல்விமான்கள் சேர்ந்திருப்பது தொகையடிப்படையில் திருப்தியளிக்காமலில்லை.

இவ்வாறு நிமிர்ந்த அறிஞர்கள் பலரின் பங்களிப்பு மறுதலிக்கப்பட்ட மக்களுக்கு எந்தளவு பயன் தந்துள்ளது என்பது அவிழ்க்கப்பட்ட பொட்டலமாயினும், சான்றிதழ் அறிஞர்களை பிரசவிப்பதிலும் கூட மலையகக் கல்விச் சமூகம் திணறிக் கொண்டிருப்பதே நடைமுறை உண்மையாகவுள்ளது. இதற்கு துளித்துளியாய் விஷம் விட்டு விருந்து கொடுக்கும் வெகுஜன இலத்திரனியல் ஊடகங்கள் காத்திரமான சேவையை செய்துவருகின்றன. அவற்றில் இந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்டும் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைத்து பெண்ணுரிமை முழங்கும் மேக்கப் மெகா சீரியல்கள் செங்கோலுடையன. பாமரனின், படித்தவனின் சுயபுத்தியை சிதைத்து இருட்டுக்குள் தள்ளும் வானவில் திரைப்படங்கள், போதைப் பொருட்கள் என்பன எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவான பிசாசுகள் எனினும், இவை இருப்பு நிலையற்று, எதிர்காலம் சூனியமாகி, திட்டமிட்ட பேரினவாத ஆக்கிரமிப்புக்களுக்குள் திணறி, அறியாமையில் உழலும் மலையகர் தமை வெற்றிகரமாகவே தோற்கடிக்கின்றன.

வாசிப்புப் பழக்கம் அருகிவரும் காலச்சூழலில் மலையகத்தில் வாசிப்புப் பழக்கம் நின்றுவிட்டது, என்பது ஆச்சரியப்படக்கூடாத செய்தி. பட்டங்களுக்காக படிப்பவர்களும், சம்பளமுயர்த்த மட்டும் படிப்பவர்களும், ஆசிரிய சமூகமும் Text களை மட்டுமே மீட்டிக் கொண்டிருக்கிறது. புதிய விடயங்களை உலக தகவல்களை, நவீன கண்டுபிடிப்புக்களை, அரசியல் பிற கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களை, வளர்ச்சியை, செயற்பாட்டுத் தத்துவங்களை நோக்கி இமைதிறக்க விரும்பாத சிந்தனா சோம்பேறித்தனம் இவர்களிடையே வெகுவாகவே வளர்ந்துள்ளது. இந்நிலையில் பொழுது போக்கு அம்சங்களுக்குள் விழுந்து கிடக்கும் மாணவர்களை, இளையவர்களை எவ்வாறு அறிவு விரிந்த சமூகமாக

மாற்றுவது, உருவாக்குபவர்களாக உருவாக்குவது? அண்ணாமலை, கோபுரம், மெட்டி ஒலி போன்ற ஞானக்கடல்கள் பற்றிய விவாதிப்புக்களே இடைவேளைகளைச் சாப்பிட்டு விடுகின்றனவே.

அண்மையில் ஐம்பத்திரண்டு ஆசிரியர்களைக் கொண்ட மலையகத்தின் பிரதான பாடசாலையொன்றில் வாசிப்புப் பழக்கம் உள்ளவரென ஒருவரே இனங்காணப்பட்டார். இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. கடந்த மூன்று வருடங்களில் க.பொ.த. (உ/த) இற்கான மாணவர் தொகை வீழ்ச்சியும் பயமுறுத்துகின்றன. இதையறிந்து மலையகக் கல்விச் சமூகம் அக்கறையுடன் சுயமதிப்பீடு செய்யவும், செயலாற்றவும் முன்வரவேண்டும்.

மலையக மக்களின் உண்மையான விடுதலை மறைந்திருக்கும் 'சிதம்பர ரகசியத்தை' திறந்துகாட்ட விரும்பாத நாடாளுமன்றமேறிய கடவுளர்களை குறை கூறிப் பயனில்லை. அவர்கள் இடப்பக்கமாய் சுற்றும் கடிகாரங்கள்.

இந்த கனமானப் பணியை எடுத்துச் செல்ல, இயலுமான்வரை எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்களை படிக்கத் தூண்டும் கல்விச் சூழலை பெற்றோரும், அயலவரும் பொறுப்புடன் உருவாக்கிக் கொடுப்பதுடன் அவர்கள் மீதான கண்காணிப்பையும் வழிகாட்டலையும், அழுத்தமாய் செய்தல் வேண்டும். கல்வித் துறை சார்ந்த, சாராத புத்தி ஜீவிகள், அரசியலாளர்கள் அவர் தம் பங்களிப்பு தொடர்பாக சிந்திக்கவும், விழிப்புணர்வூட்டவும், பணியாற்றவும் முன்வருவதே உண்மையான சமூகம் மீதான விருப்பின் வெளிப்பாடுகளாக அமையும்.

சமூக மாற்றத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான காலகட்டத்தில், அதன் முக்கிய அடித்தள கல்வி மீது அக்கறை காட்ட தவறுவோமாயின் நவீன அறிவுலகில் நாம் இருண்ட காலத்துள் தள்ளப்படுவோம் என்பது நிஜம்.

உண்மையான சமூக நோக்குடன் உழைத்துக் கொண்டிருக்கும், இயங்கிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை, கல்விமான்களை, நலன் விரும்பிகளை, பல்கலைக்கழக மாணவர்களை, பெற்றோர்களை வடம் வாழ்த்துகிறது.

**"வடம் அமிழ்த்தப்பட்டவர்க்காக உழைக்கும்"**

ஆசிரியர் குழு ●

# தோழமைத்தாபம்

உன்னிடமிருந்து ஒரு செய்தி
சொல்லப்படவிருக்கிறது எனக்கு...

அது தபாலில் வரலாம் – அல்லது
உன்வீட்டு தொலைபேசி
அறிவிக்கலாம் – எப்படியோ
ஒரு செய்தி
சொல்லப்படவிருக்கிறது எனக்கு...

நேற்றைய யுத்தத்தின் முடிவாகலாம்
அன்றி அவிழ்ந்த நம் முடிச்சுகளின்
தொடராகலாம் – அல்லது
உன் திருமண அழைப்பை
நீயே கூட நேரில் தர வரலாம்.
ஒரு கத்தியோ ஒரு மாலையோ
உன்னிடமிருந்து ஒரு செய்தி
சொல்லப்படவிருக்கிறது எனக்கு...

இத்தனை நாள் நம் மனசில்
நசுங்கிப்போன நரக நிமிஷங்களின்
நிம்மதியாகலாம் – நம்
பிரிவின் பிரளயமாகலாம்
உனக்குத் தெரியாமலும்
எனக்குப் புரியாமலும்
கத்தி செருகிய இதயத்துடன்
நம் பழைய காதல்கள்கூட
கனவில் வந்து கண் விழிக்கலாம்
ஆக ஒரு செய்தி
வரவிருப்பதை காலையில் காகம்
வேண்டா வெறுப்பாய் கரைந்துபோனது.

அந்த காகம் போலவே...
கறுத்துப்போன நம் உறவாய்
எனக்குள்ளும்... எனக்குள்ளும்
மனசின் கரையில் கறைபடிந்தபடி
வியாபித்துக்கிடக்கிற
கிழிஞ்சல் ஞாபகங்களை
பொறுக்கிக்கொண்டே....
மெதுவாய்... மிகமெதுவாய்...
விடைதேடி நகரும்...
நம் தூய நட்பு...!

**பெரியசாமி விக்னேஸ்வரன்**
**ஹட்டன்.**

# கதை

வானத்துச் சூரியன்
வாசலைத் தழுவுமுன்
பிரட்டுக்களம் சென்று
பேர் எழுதப்படுவோம்
யாருக்கு
எந்த மலை
என்ன வேலை – என்று
எம்மீது
அதிகாரம்
அத்திவாரம் போட்டுவிடும்

கானு வெட்டு, கவ்வாத்து
அருகெடு, கொழுந்தெடு
மருந்தடி, உரம்போடு – எனவென்
உடம்போடு, ஒட்டியது
உழைப்பு

நாட்கூலி வேலை
நாலரைக்கு சங்கு
ஒன்னாந்தேதி பட்டினி
பத்தாம் தேதி சம்பளம்
சம்பளத்தில் தவறாம
சங்கத்துக்கு சந்தா
சாவுக்கு நிதி
மாவுக்கு நிதி

சீனி காணா சாயம்
சீமை மா ரொட்டி
எட்டடி வீடு...

மகனே
இப்படி நான்
வாழ்ந்த கதை கூற
அழிந்த கதை தெரியும்

இப்போ
தண்ணீர் மறிப்பு என்றும்
கருக் கலைப்பு என்றும் – நாம்
அழியும் கதை கூறு
வாழ்வும் தெரியும்.




திலகர்

## முதல் ராமம்

உழைப்பவர்களுக்கு
ராமம் போடும் புத்தி
அன்றே ராமனுக்கு
வந்துவிட்டது
அவன் குடிசைக்கட்ட
தும்பெடுத்து உழைத்த
அந்த சின்ன அணிலுக்கே
ராமம் போட்ட
முதல் ஆள்... அந்த
ராமனே தான்.

மல்லிகை சி.குமார்

## கவனம்

நிமிடக் கடவைகளில்
நெஞ்சம் 'டிக் டிக்' கும்
அந்த விநாடிகளில்
கை கூசி உள்ளங் கால் கூசி
உடல் நடுக்குற்று
மனம் பேதலித்து
பிடி தளர்த்து
இரு(க்)கை வழுக்கும்.
ஒவ்வொரு கணமும்
உணர்வு மரித்து உயிர்க்கும்
சிந்தை சமநிலை நிதானிக்கும்
நெஞ்சம் விம்மி பெருமூச்செரிக்கும்.
வட்டவளை (வுகள்) தாண்டி
பஸ் பயணிக்கும் வேகமாக.....

ஆ.புனித கலா

## ஹைக்கூக் கவிதைகள்

சோகத்தின் சாக்கடை
பாசத்தின் பனித்துளி
கண்ணீர்.

உணர்வின்
உச்சஸ்தான
முனையில்
கசிந்தொழுகும்
கவிதை.

ஏ.ஸிபானா
மருதமுனை -

# புதுக்கவிதை எப்படி இருக்கவேண்டும்

*– சென்ற இதழின் தொடர்ச்சி –*

இதனால் புதுக்கவிதைக்கும் பரவலானக்களம் பாடுபொருள் விரிவு- சமூகச்சார்பு- தமிழ் மண்ணிற்கே உரிய சித்தாந்த மரபு சார்ந்த மகிழ்நோக்கை (ழிவஅளைஅ) தமிழ்மரபு சார்ந்த ஜனநாயகத்தன்மை, கிராமியத்தன்மை, மிக்கவெளிப்பாடு, சாதிமத மறுப்பு மனிதாபிமானம், சமகாலசிக்கல்களையும் சீர்கேடுகளையும் வெளிப்படுத்தல். அனைத்துலகப்பார்வை வரலற்றுணர்வோடு வாழ்வில் நம்பிக்கையூட்டல் போன்றவற்றை ஏற்றுக்கொண்டனர்.

இவற்றின் முழுமையான தர்க்கம் ஈழத்துக்கவிஞர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இன்னொன்று இவர்களிடம் யதார்த்தம் இல்லை. மரபின் அடிப்படையில் எழுதிவந்தனர். அதாவது தமிழ்க்கவிதை மரபில் வெறும் சொல் நேர்த்தி, சொல் ஜாலம் இவற்றையே கவிதை ஏற்றுக் கொண்டாடும் பழக்கம் உண்டு. வெறும் உத்தி சேர்க்கைகள், அலங்கார வார்த்தைப் பந்தல்கள், சர்வ கொள்கைச் சமரசமும், சொல்லடுக்குகள் அடைமொழிகள் போன்றவற்றில் போலி உணர்ச்சியும் கலை என்ற வேகமும் தரித்து மொழியை அலங்கார குப்பையாக்கி விடுகின்றனர்.

இரவல் அனுபவங்களும், இரவல் கோஷங்களும் கவிதையாகுமா...? கவிதையை விதைக்கும் போது முரண்தொடை, அங்கதம், படிமம், புதிர் என பல்வேறு உத்திகளைக் கையாளவேண்டும். ஓர் இன்ப நிறைவு தரும் கனவுப் பாணியை கவிதையில் கொண்டு வந்தனர். ஒரு பெண்ணின் சோகத்தைக் கூட,

> 'அந்த மகரயாழின் அந்தரங்கத்தில் தவங்கிடந்த
> இராகங்கள்' (தமிழன்பன்)

எனக் கனவுத்தன்மை ஒருத்தமிழ்தனத்தோடு இவர்களிடம் அகம் - புறம் பாணியில் கவிதைத் தொகுப்புக்களில் விரிந்தது. காமராசன், மீரா, மேத்தா, சிற்பி, தமிழன்பன் போன்றோர் இதற்கு சான்றுளர்.

இந்தக்கால கவிதைகளில் பலவகையான உத்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் கீழ்க்காணும் நான்கு உத்திகள் மிகுதியும் பயன்படுத்தப்படுகின்றன.

1. படிமம் (Image)
2. குறியீடு (Symbol)
3. முரண் (Paradox)
4. அங்கதம் (Satine)

என்பார் சு.ப. வீரபாண்டியன்.(இந்தக் காலக்கவிதைகள் உத்திகள் ப.னை)

இதில் படிம உத்தியை மட்டும் எடுத்துப் பார்த்தால் படிம உத்தி என்பது, 'அறிவு நிலையிலும், உணர்வு நிலையிலும் எளிதில் விளக்க இயலாதவற்றை நொடியில் தெளிவாக்கி தம்முன்னே நிறுத்தவல்லதே படிமம்' என்பார் எஸ்ராபவுண்ட் (Ezra pound) 'The magazine of verse'.

சுருங்க சொன்னால் 'படிமம் சொற்களால் தீட்டும் ஓவியம். சொல்லிலே வடிக்கும் சிற்பம். உருவகத்தை ஆழ்ந்த பொருளுடையது. பல எண்ணங்களைத் தூண்டும் ஆற்றலுடையது'. என Dr சி.இ. மறைமலை கூறுவார்.

கவிதையின் பாடுபொருள் எதுவாயிருப்பினும் நேரடியாக அணுகுதல், கவிதை வெளிப்பாட்டிற்குப் பயன்படாத எந்த ஒரு சொல்லையும் நீக்கி விடுதல் எனும் இந்த கொள்கைகளையும் படிமவியல் இயக்கத்தினர் கைக்கொண்டனர். படிம உத்தியானது தமிழில் அப்துல் ரஹ்மான், அபி. ந. பிச்சமூர்த்தி, சி.மணி, ஞானக்கூத்தன், பசுவய்யா, நா. காமராசன், தருமு. ஆருப் சிவராம் போன்றவர்களால் சிறப்பாகக் கையாளப்பட்டன.

"இரவெல்லாம்
உன் நினைவுகள்
கொசுக்கள்"

என அப்துல் ரஹ்மான் படிமத்தில் எழுதியுள்ளார். (பால்வீதி) படிமம்-உணர்வு, உணர்ச்சி, அறிவு (Sensous Emotional and Intellectual) ஆகிய மூன்று தளங்களிலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. உணர்வுப் புலன்களைத் தாக்கு உணர்ச்சியின் சலனங்களை விளைவித்தாலும் அறிவார்ந்த அர்த்தத்திற்கு அழைத்து செல்லவில்லையெனில் படிமம் பயனற்றதாகிவிடும். இக்கவிதைகளில் ஏக்க உணர்வும், நினைவுகளும் பகுப்பொருளாக உருவகிக்கப்பட்டுள்ளன. நினைவுக் கொசுக்களின் தொல்லையால், இரவெல்லாம் தூக்கமின்றி வேதனைப்படும் மனிதன் நம் கண்முன் வந்து போகின்றான். அல்லது நிறுத்தப்படுகின்றான். அறிவுநிலையிலும் உணர்வு நிலையிலும் எளிதில் விளக்கமுடியாத மனவேதனையை இப்படிமம் நொடியில் தெளிவாக்கி நம் முன் நிறுத்துகின்றது.

எனவே, இவற்றை தொகுத்து நோக்கினால், இந்த புதுக்கவிதையின் உள்ளார்ந்த உயிர்த்தன்மை இந்தப்படிமம், அங்கதம், முரண், குறியீடுகளையே தங்கியுள்ளது. அவற்றினை கையாண்டு எழுதப்பெறும் கவிதை ஒன்றும் ஒரு உயிரையே பெற்று உலவுகின்றது. இன்றைய கவிஞர்கள் கூட்டம் புதுக்கவிதையின் உள்ளார்ந்தத்தை புரிந்தபாடில்லாமல் எழுதும் கவிதைகள் வெறும் ஆணியில் தொங்கும் ஆடைப்போல எந்தவித உள்ளார்ந்தமும் இல்லாமல் ஊசலாடுகின்றது. கவிதையை வாசிப்பவன் ஒருக்கவிஞனாக இருக்கவேண்டும் என்று யாரோ சொன்னதாய் ஞாபகம். கவிதையின் முடிவுறும் தன்மையும் சிந்தையில் மின்னல் வெட்டி போகவேண்டும், என்பது கவிதைக்கு உயிர் வேண்டும் என்ற சமகால இலக்கியக்கர்த்தாக்களின் மன ஆதங்கங் களாகும்.

எஸ்தர் லோகநாதன்
பேராதனை பல்கலைக்கழகம்
இரண்டாம் வருடம் ●

# முகமூடி வேண்டாம்

கிளைதாவும் கரு மந்திகளாய்
அடிக்கடி கட்சிதாவும்
மழைவாழ் மாந்தரின் தலைமைகள் கண்டு
நிலைகொள்ளாத மனது
எதுவித ஊக்கங்களுமற்ற
எண்ணப்பாடுகளுடன் பின்செல்லும்
படித்த புயல்களுக்காய்
விழிபிதுக்கி வியக்கிறது!

சுயம்விற்று சந்தோஷம் தின்னுமிந்த
சுரணையற்ற தன்மையினை
இயலாமையென ஏற்றுக்கொள்ள
எங்ஙனமியலும்?

காலம்
நமக்கான விடியலுக்காய்
கசிந்தொழுகுவது கண்டும்
இன்னுமேன் நம்மை நாமே
ஏமாற்றிக்கொண்டு!

அராஜகத்துக்கெதிராய் ஏந்துகின்ற
ஆயுதங்கள் மட்டுமல்ல,
போர்குணம் கொண்டெழும் பேனையும்
வலியதுதான் உணர் தோழா!

நொடிபொழுது நேரத்தில்
நூற்றுக்கணக்கான திரிகளை
எரிய வைக்கும் மந்திரம் தெரிந்த
மாயநெருப்பு நீ!

எரியத்துடிக்கும் திரிகளை
ஏதுவாய் இனங்கண்டு
அதிலுன் பன்முகத்தை அரங்கேற்று!

வேதனத்திற்காய் மாத்திரம்
வேதம் புகட்டியவுன் பணி
இனி சிறுமை சரிக்கும் வெறியுடன்
சிகரமேகட்டும்!

போதனைகள் சாதனைகளாகி
புவியெங்கும் புழுதி கிளப்பி
எரியூட்டட்டும் – நம்
எதிரிகளின் கோட்டைகளை.

மார்க்ஸ் பிரபாகர்
ஹப்புத்தளையூர்

## ஒரு முன்னோக்கு

சிறுவனின் அழுகுரல் கேட்கிறேன்
அமிழ்ந்துவிட்டதாம் அவனது வீடு
தட்டிக் கொடுக்கிறேன்.
தடைப்போட முடியாமல்.

முதிர்ந்த விழிகள்
நிரைந்த சோகம்
நிமிர்ந்த நினைவுகள்
அடர்ந்த அவலங்களுடன்.

அருகில் ஒரு குரல்
கையில் என்ன
படங்களா பாட்டி?
ஆகா...
அழகிய நீர்வீழ்ச்சிகள்.

இவைகள் எங்கே?
எங்கோ...
வியர்ப்புடன் சிறுவன்.
அவமானத்தில்
பாட்டியான, நான்...!

**ஆர்த்தி.**

ஒரு படைப்பாளியின் பல்வேறு ஆக்கங்கள் அவரது சிந்தனையினதும் உணர்வுகளதும் வேறுபட்ட கோணங்கள். அவற்றிடையே தோற்றப்பாடாக உள்ள முரண்பாடுகளிடையே மிகுந்த ஒருமையையும் நாம் காணமுடியும்.


இரக்குவானை நகரில்
தரம்வாய்ந்த சகலவிதமான ஆடைத்தெரிவுகளுக்கும்
நாட வேண்டிய இடம்



Ram Saree Center



No: 151, Main Street,
Rakwana

# ஆயுளின் கனவு

அடுத்த இரவுக்கான
கனவு இது

ஒரு கிரகணத்தில்
வீழ்ந்து
எங்கள் வேதனைகள்
எரிந்துவிடும்

ஒரு பருவமழையில்
எங்கள் கண்ணீர்
கழுவப்படும்

அடுத்த யுகமொன்றில்
எங்கள் ஊதியம்
உயரும்

மந்தைகள், மான்களெல்லாம்
எங்களை மனிதராய்
மதிக்கும்

ஒரு சூரிய இரவில்
நாங்கள் நிம்மதியாய்
உறங்குவோம்

இப்படி
கனவுகள் மீதே
நகர்கின்ற
வாழ்கை என்பதால்

இது
அடுத்த இரவுக்கான
கனவு



**மு. கீர்த்தியன்**
**வடுக்கலையூர்**

மரபுக் கவிதை என்றால் வெறும் கட்டுப்பெட்டித்தனம் என்று கருதுகிறவர்கள் மரபுக்கும் நவீனத்துவத்துக்குமிடையிலான உறவை உணராதவர்கள்.

## கவிஞர் சொல்கிறார்

கவிதையின் முதல் அர்த்தமும் முற்றிலுமான அர்த்தமும் அது கவிதையாக இருப்பதுதான். நிலாவுக்கு அது வெளிச்சமாக இருப்பதே அர்த்தம்தான். நெருப்புக்கு வெப்பமாக இருப்பதைக் காட்டிலும் வேறு என்ன தனியான அர்த்தம் இருக்க முடியும்?

கவிதை கவிதையாகாமல் அர்த்தமாகி விடுவதை ஒரு போதும் உண்மைக் கவிஞன் ஒப்புக் கொள்ள மாட்டான். அர்த்தங்களே கவிதையாக வேண்டும் என எதிரப்பார்ப்பதைவிட அகராதிக்கு ஆர்த்தி எடுக்கப் போகலாம்;
நிகண்டுகளுக்கு பூச்செண்டுகள் கொண்டு போகலாம்.

கவிதை தான் கவிதையாவதற்கு வார்த்தைகளைக் காட்டிலும் அர்த்தங்களைக் காட்டிலும் வாழ்க்கையையே நம்பியிருக்கிறது. வாழ்க்கைக்கு அர்த்தம் - அனுபவங்களால் தெரிந்தும் தெரியாமலும், புரிந்தும் புரியாமலும் சிதறிக் கிடக்கிறது. திரட்டிச் சேர்க்க முற்படும்போது கவிதையும் சிதறி விடுகிறது.

அனுபவங்களுக்குப் பொழிப்புரைத் தரவும் விருத்தியுரை செய்யவும் முற்பட்டால், கவிதை ஒரு விபத்துக்குத் தன்னைப் பலியிட்டுக் கொள்வதாகவே முடியும். ஆனால், அந்த அனுபவங்களுக்கான விமர்சனம், கவிதைக்குப் பக்கத்திலோ தூரத்திலோ இருப்பதை எழுதியவன் அக்கறையோடு அனுமதிக்கவே செய்வான்.

கெடுபிடியான தத்துவ வார்ப்பில் எல்லாவற்றையும் எழுதிவிட முனைந்தால், அந்த இறுக்கத்தில் கவிதை நிச்சயம் மூச்சுவிட முடியாமல் மரித்துப்போகும். எனக்கும் என் கவிதைக்கும் சுதந்திரம் வேண்டும். இந்தச் சுதந்திரத்தை எனது எல்லா நூல்களிலும் பார்க்கமுடியும்.

தமிழன்பன்
கிழக்கு சாளரம்

"வடம்" சந்தா விபரம்

தனிப்பிரதி : ரூபா 20/=

ஆண்டுச் சந்தா : ரூபா 100/=(தபால் செலவு உட்பட)

சந்தா பணத்தை மணியோடர் மூலமாக பலாங்கொடை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு அனுப்பவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:

R. NELSON MOHANRAJ
NO; 38, SAMANPURA,
OLUGANTOTA,
BALANGODA.

# மனிதராய் வாழ.

ஒப்புகிறதா?
வாழ்வுள் புக எத்தனிக்கும்
நெருஞ்சிகளை பூக்களாக்க...

தெரியுமா?
சாத்தியங்கள் மரித்த
நீள் பொழுதுகளில்
சோகம் சுண்டி சிரிக்க...

மறப்பாயா?
நம்பிக்கை துளிர்ந்த
வாழ்வு மரத்தை
வேர் கிள்ளி வீசிய
காலத்தை...

முடியுமா?
காற்று கொணர்ந்த
கீற்றொன்றில் சிதைந்து
உறுத்தும்...
நுரையீரலின் வலியை தாங்க...

எதனையும் ஒப்ப முடியவில்லை
எதனையும் அறிய முடியவில்லை
எதனையும் மறக்க முடியவில்லை
எதனையும் தாங்க முடியவில்லை
மனித மனதால்...
ஆயினும்
வாழ்வு வெளியில் சில
நிறுத்தல்கள்...
நிட்டூரங்கள்...
நெருக்குதல்கள்...
தேவையாய் இருக்கு
மனிதராய் வாழ...

**சண்முகம்சிவகுமார்,**
**கொட்டகலை.**

புற நிலையும் மனிதனின் அக நிலையும் ஒனறோடொன்று செயல்பட்டு, பங்களிப்பாற்றி உருவாகுவதே கவிதை.

# கவிஞன் பதில்கள்

**புதிய 'இஸங்கள்' தமிழுக்குள் நுழைந்து கொண்டிருப்பது நவீன இலக்கியத்திற்கு வளம் தானே?**

வே. சசிகலா – பத்தனை

புதியது எதனதும் வருகை தன்னளவிலேயே நல்லதோ தீயதோ அல்ல. உண்மையில் தமிழ் இலக்கியப்பரப்பில் செழுமையான ஒவ்வொரு பகுதியும் அயலிலிருந்து ஊட்டம் பெற்றுள்ளது. அதே வேளை, அயலிலிருந்து வரும் எல்லாவற்றையும் ஒரு சமூகம் உள்வாங்குவதில்லை. நம் முன் தெரிவுகள் உள்ளன. நாம் ஒன்றை ஏற்பதும் மறுப்பதும் அது என்ன பயன்களைத் தரும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையிலேயே. நமது பார்வை "நூறு பூக்கள் விரியட்டும், நூறு சிந்தனைகள் முட்டி மோதட்டும்" என்ற அடிப்படையில் இருப்பது நல்லது.

புதிய இஸங்கள் வராமல் எவரும் தடைபோட இயலாது. ஆயினும் வருகிற ஒவ்வொன்றின் குணமும் குற்றமும் நாடி மதிப்பிடுகிற தேவை நமக்குண்டு. நமது சூழலின் ஒரு பாரிய பலவீனம் என்னவென்றால் அயலிலிருந்து, குறிப்பாக மேற்கிலிருந்து, எது வந்தாலும் குருட்டுத்தனமாக அதை வழிப்படுகிற ஒரு போலி 'அறிஞர்கள்' கூட்டத்தை நாம் கேள்விக்குட்படுத்தத் தயங்குவதாகும். மேற்கில் செல்லாக்காசாகிப் போன விடயங்களை எல்லாம் இரண்டாங்கை மூன்றாங்கையாக வாங்கி வந்து வணிகம் செய்கிறவர்கள் உள்ள அளவுக்கு நம் சூழலில் உள்ள ஒரு சின்ன விஷயத்தைக்கூட நிதானமாகப் பகுத்தறிவுடன் ஆராய்கிறவர்கள் இல்லாதது நமது பெரிய குறைப்பாடு.

**தென்னிந்திய (தற்கால) தமிழ்க்கவிதைகளுக்கும், ஈழத்துத் தமிழ்க் கவிதைகளுக்கும் இடையிலான வடிவமாற்றங்கள் எத்தகையன?**

ஆ. புனிதகலா – வட்டவளை

தமிழில் புதுக்கவிதை நிலைநிறுத்தப்பட்டு அரை நூற்றாண்டாகியும் கவிதையின் பல்வேறு சாத்தியப்பாடுகளையும் நாம் போதியளவில் தேடுதலுக்குட்படுத்தியிருக்கிறோமா என்று சொல்லுவது கடினம். சில மரபுக் கவிஞர்கள் பேச்சோசையின் நயத்தை விளங்கிக்கொண்டளவுக்கு புதுக்கவிஞர்களில் ஏகப் பெரும்பாலானவர்கள் பேச்சோசையின் ஒலி நயத்தையோ சந்தங்களையோ பற்றிய உணர்வுடையவர்களாகவே தெரியவில்லை. வடிவத்தைப் பொறுத்தவரை, தமிழ்க் கவிதையின் தேடல் விரிவடைய வேண்டியுள்ளது. பரீட்சார்த்தமாக ஏதோ செய்வதாக எண்ணி வார்த்தைப் பின்னல்கள் போடுகிற பலர் கவிதையை எங்கோ தவறவிட்டு விடுகிறார்கள்.

தமிழகக் கவிதையில் 'புத்திஜீவித' தன்மைக்கு இன்னமும் செல்வாக்குள்ளது. சமூக உணர்வும் உணர்ச்சி வேகமும் கொண்ட கவிதைகள் முன்னைவிட சற்றுக் கூடுதலாக வருகின்றன. ஆயினும், எதிர்ப்புக்குரல்கள் நடுவிலும், விடுதலை சார்ந்த போராட்டச் சிந்தனை குறைவாகவே காணப்படுகிறது. இன்றைய தமிழகத்தின் அரசியற் சூழலில் அதிகம் எதிர்பார்க்க நியாயமில்லாமல் இருக்கலாம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வாழ்வைப் பற்றி நேரடியாகவே பேசினாலும், கவிஞர்களில் பெரும்பாலானவர்கள் தமது உடனடியான சூழலுக்குள் தமது பார்வையை முடக்கிக் கொள்கிறார்கள். சில விதி விலக்குகள் போகக் கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக ஒரு வகையான தேக்க நிலை இருந்து வருகிறது.

இன்று வேகமாக மாறி வருகிற அரசியற் சூழ்நிலை விரிவான புதிய பார்வைகளையும் ஈழத் தமிழ்க் கவிதைக்கு ஒரு புதிய வீச்சையும் வழங்கும் என்பது என் எதிர்பார்ப்பு. நமது படைப்பாளிகள் தமது வாசிப்பின் பரப்பையும் சிந்தனையின் வீச்சத்தையும் விரிவாக்குவது இன்று அவசியமானது.

**படிமம், குறியீடு என்பன தொடர்பாக எனக்கு தெளிவு இல்லை. உதாரணங்களுடன் விளக்கம் தரமுடியுமா?**

**யு.லட்சுமனன் – நாவலபிட்டி**

குறியீடு என்பது நேரடியாகச் சுட்டிக்காட்ட இயலாத அல்லது சுட்டிக்காட்ட விரும்பாத ஒரு பொருளை இன்னொன்றால் அடையாளப்படுத்துவது. உவமைகள், உவமேயங்கள் போன்றவை நாம் அடிக்கடி காணக்கூடிய எளிமையான குறியீட்டு முறைகள். இன்னும் ஆழமாகவும் குறியீடுகள் பயன்படலாம். பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி பாரதத்தின் குறியீடாகப் பயன்படுவது பற்றி அறிவோம். சில சமயங்களில் ஒரு பொருள் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையும் குறிக்கலாம். ஒரு சொல் பயன்படுத்தப்படுகிற முறையையொட்டி அது வழமையாக அடையாளப்படுத்துவதை விட விரிவான சிக்கலான கருத்துக்களை வழங்கலாம்.

படிமம் என்பது ஒரு சித்தரிப்பு அல்லது உருவாக்கம் . நாம் காணாத ஒரு பொருளையோ இடத்தையோ காட்சியையோ ஒருவர் விவரிக்கிற போது அவர் விவரிக்கிற விடயம் பற்றி நம் மனதில் ஒரு சித்திரம் உருவாகிறது. இந்த சித்தரிப்பு, நேரடியான விவரணமாக இல்லாமல் குறியீடுகள் மூலமும் சாடையாகச் சுட்டிக்காட்டப்பட்டும் மறைமுகமாகவும் செய்யப்படலாம். தமிழ்ப் புதுக் கவிதையின் தொடக்க நிலையில் படிமங்களையே கவிதையாகக் கருதுகிற ஒரு போக்கு இருந்தது. தருமு சிவராமு(பிரமிள்) தொடக்கத்தில் எழுதிய பல கவிதைகள் அந்த வகையானவை.

பின்னைக்காலத்தில் குறியீடுகளும், படிமங்களும் வாசகருக்குப் படைப்பாளிகள் விடுகிற ஒரு சவால் போல புதிர்த்தன்மையுடனும் குழப்பமாயும் அமைந்தன. இந்தப் போக்கு இப்போது நலிவடைந்து வருகிறது என்று நினைக்கிறேன்.

**சமூகப் படைப்பாளிகளின் இலக்கியக் கடப்பாடு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?**

**அ.ரோஹிணி– காவத்தை**

ஒருவரது இலக்கியக் கடப்பாட்டை அவரது உலக நோக்கு முடிவுசெய்கிறது. சமூக நீதி, மனித சமத்துவம், மனித விடுதலை என்கிற நோக்கிற் படைக்கிறவர்களையே கருதுகிறீர்கள் என நினைக்கிறேன். அப்படிப்பட்ட படைப்பாளிகள் தமது படைப்பு எப்போது, எவரை, எப்படிச் சென்றடைய வேண்டும், அது எந்த வகையான சிந்தனைகளைச் கிளறிவிட வேண்டும் என்பன பற்றித் தெளிவுடன் இருக்க வேண்டும்.

தங்களது படைப்புக்கள் ஏற்படுத்தும் விளைவுகளிலிருந்து கற்க அவர்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

மக்களிடமிருந்து மக்களுக்கு என்ற அணுகுமுறை மக்களிடமிருந்து கற்றதைச் செழுமைப்படுத்தி மக்களுக்கு மீள வழங்குவதைக் குறிக்கும். எனவே, ஒரு படைப்பாளி தன் சிந்தனையில் மக்களுக்கு மிக நெருக்கமாக இருக்க வேண்டும்.

தனது சாதனைகள் பற்றிப் பெருமையடைவதற்கு மாறாகத் தனது ஆற்றலுக்கேற்பத் தன்னால் பங்களிக்க முடிகிறதா என்று அடிக்கடி தன்னைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**இலக்கிய விருதுகள்...?**

S. **சத்தியச்செல்வன் -**

**இறக்குவானை**

எல்லா விருதுகளும் அவற்றை வழங்குகிறவர்கள் பற்றியே அதிகங் கூறுகின்றன. ஒரு நல்ல படைப்பாளியின் இலட்சியம் நிச்சயமாக விருதுகளல்ல. எந்த எழுத்தும் அது சொல்ல விரும்பியதைச் செம்மையாகச் சொல்வதும் யாரைச் சென்றடைய வேண்டுமோ அவர்களைச் சென்றடைவதுமே முக்கியமான வெற்றிகள். எந்த விருதும் ஒரு படைப்பாளியை ஊக்குவிக்கிற அளவுக்குப் பயனுள்ளது. தன்னுடைய பெறுமதியை ஒரு படைப்பாளி விருதுகளைக் கொண்டு அளக்க

**"எதிர்ப்பிலக்கிய வாதிகளே ஒவ்வொரு காலப்பகுதியிலும் வளர் நிலைப் படைப்பாளிகளை மழுங்கடித்திருக்கிறார்கள்" எனும் கூற்று தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

**முார்க்ஸ் பிரபா - ஹப்புதளை**

எதிர்ப்பிலக்கியத்துக்கும் வளர்நிலைப் படைப்பாளிகட்கும் அடிப்படையில் ஒரு முரண்பாடும் இல்லை என்று நினைக்கிறேன். வளர்நிலைப் படைப்பாளிகளை யாரும் கடுமையாக விமர்சிப்பது கூட அவர்களுட் பலரை மழுங்கடித்ததில்லை. முகத்துதியான புகழுரைகள் அதிகங் கெடுதல் செய்துள்ளன.

அது போக, இன்று நம் நாட்டில் உள்ள அடக்குமுறைச் சூழலில், பெரும்பாலான வளர்நிலைப் படைப்பாளிகளுங் கூட எதிர்ப்பிலக்கியவாதிகளாகவே உருவாகிறார்கள் அல்லவா!

படைப்பாளிகளிடமிருந்து கவிதைகள், கவிதை தொடர்பான

கட்டுரைகள், விமர்சனங்கள், ஓவியங்கள்

எதிர்பார்க்கப்படுகின்றன.

## மேடை

அலங்கரிக்கப்பட்டப்
பொய்களுக்கெல்லாம்
ஆசனமிட்டு அமர்த்திய
அந்த மேடை।
ஏசி வாசிகளாயும், சில
ஓசி வாசிகளாயும் அங்கே
சில தேசவாசிகளின்
இச்சைப் பேச்சுகளுக்கும்
கொச்சைப் பேச்சுகளுக்கும்
தன்னை அடிமைப்படுத்திக்கொண்ட
அந்த மேடை।
குடிக்கும், கும்மாளத்திற்காய்
விழித்திருந்து தன் அமைவின்
இலக்கையே அர்த்தப்படுத்தாத
அந்த மேடை।
ஏமாற்றுப் பேர்வழியினரின்
ஓய்விற்கும், ஒய்யாரத்திற்குமாய்
ஒதுக்கப்பட்ட
அந்த மேடை।
என் அறிவாற்றல்களின்
அரங்கேற்றத்திற்குமாகவும்
அலங்கரிக்கப்படுமா?
என் ஈன்றோரின்
கனவுகளையும், என்
ஆசைகளையும்
காட்சிப்படுத்த ஒரு
வாய்ப்பளிக்குமா?

க. ஆஷா

ஒரு கவிதை மனதில் எழும் சூழ்நிலையும் கவிதையை எவ்வாறு வெளிப்படுத்தின. அதன் தாக்கம் அதிகமாயிருக்கக் கூடும் என்ற எண்ணமும் கவிதை வடிவத்தின் தெரிவுக்குக் காரணமாகின்றன.

## வராத காலம்

உரிமைக்காகப் போராடும்
வீரமகளிர் தம் – உலகில்
மனித உரிமை ஏதென்றறியாமல்
தேயிலைகளினடியில்
தேடல்களையே
தொலைத்துவிட்டு
கருகிய
எதிர்பார்ப்புக்களுடன்,
நீரோடைகளுக்குள்
மூழ்கிய நினைவுகளுடன்
ஈர மண்ணுக்குள்
புதைந்துபோன கனவுகளுடன்
முதிர்ந்த விழிகளில்
தேங்கிய இலட்சியங்களுடன்,
கவிதையாக, தென்றலாக
பேசப்படுபவர்கள்
பெண்ணினமாக மட்டும்
பேசப்படாமல்.......
பேசப்படாமல்.......
பொறுமை சுமக்கும்
இந்த பூமிக்குள் இருக்கும்
வெடிக்கும் எரிமலை
வெளிவரும் காலம்
இன்னும் வரவில்லை.

ஜ. பாத்திமா பஸ்னியா
ஹொற்றூட்.

வீங்கு வெயில் தனில் பழனம்
உழுவோன் நெற்றி
வேர்வையென என்கண்ணீர
விரையு தேடி!
கண் சமைத்த வெண்பருக்கை
அனைய என்றன்
கண்ணீரில் கொடுங்காலம்
பசி மாறாதோ!

கம்பதாசன்

ஒரு படைப்பாளி எதை எழுத வேண்டும் என்று நிர்ப்பந்திக்க கூடாது என்ற வாதம் ஏற்புடையது. ஆயினும் அந்த படைப்பு எத்தகைய முனைப்புடையது என்பதைச் சுட்டிக்காட்டும் பொறுப்பும் உரிமையும் எவருக்கும் இருக்கலாம்.

## வல்மை

மூலவர்ணமில்லாமலேயே
வெளுத்த சாதியின்
நிறத்தை
மூடி, மூடி மறைக்க முனையும்
ஏழைச்சிறுமியின்
பலுப்பு நிற கண்களுள்
கண்டு கொண்டான்.
கண்டு கொண்டான்.

நிமிர முடியா
வெப்பமுகத்தினை
புத்தகம் பார்க்கும்
பாவனையில்
குனிவித்துக் கொள்ளும்
உணர்வுகளின்
அவமானத்தை, தாழ்வுணர்வை
கடைக்கண்ணால்
கேட்டுக் கொண்ட பின்னும்
“குலமும் குணமும்” பற்றி
விரிவுரை தொடர்வித்தான்.



விருப்பமின்றி
அவள் பார்க்கும்
கருப்பு எழுத்துக்களில்,
தன் தந்தை தெருவோரம்
செருப்பு தைக்கும்
காட்சியின் நிழல்
ஈஸ்மன் கலரில் தேங்கிய
கண்ணீரில்
ஊர்வலம் போகின்றது..

வார்த்தைகளால்
காட்சி செய்த வல்லமை – அந்த
“தேவகுரு”வினுடையது.

**இரேப்பனகை**

சிலப்பதிகாரத்தையும் கம்பராமாயணத்தையும் விமர்சிப்பது சிலருக்கு புரட்சிகரமானதாகத் தோன்றலாம். ஆயினும் பாமரத் தனம் புரட்சியாகி விடாது.

— மல்லிகை சி. குமார் —

- அறுபதுகளில் எழுத்துத் துறைக்கு பிரவேசித்தவர்.
- "மாடும் வீடும்" என்ற கவிதை நூலுக்கும், "மனுஷியம்" என்ற சிறுகதை நூலுக்கும் சொந்தக்காரர்.
- மத்திய மாகாண சாகித்திய விருது பெற்ற எழுத்தாளர்.
- கவிதை, சிறுகதை, ஓவியம் என பல் துறை ஆளுமைக் கொண்ட மூத்த படைப்பாளி.
- மலையக மக்களையும், மண்ணையும் ஆத்மார்த்தமாக நேசிக்கும் காத்திரமான படைப்பாளி

**நீண்ட காலமாக எழுத்துத் துறையில் இருக்கிறீர்கள். உங்களுடைய இலக்கிய பிரவேசம் எவ்வாறு ஏற்பட்டது?**

பாடசாலை கையெழுத்து பிரதியில்தான் என் முதல் பதிவு. ஆனால், மேற்கொண்டு படிக்க முடியாத நிலையில்... அடிப்பட்டுப் போனவன். வாங்கிய அடிகள் ரணமாகி அந்த வேதனையின் முணங்கள் தான் எனக்குள் இலக்கியமாகியது. அனுபவம் என்பதை விட அனுபவித்தவன் என்பதால்... வெளியில் சொல்ல 'எழுத்து' ஆயுதமாக இருந்தது. எனவே செதுக்கியவன் என்பதைவிட ஆழமாக கீறிப்பார்த்தவன். பொறுமையாக மனதுக்குள் போட்டு ஆற வைக்க முடியாமல் வெடித்தவன். அந்த கருக்கள் ஏதோ ஒரு வடிவத்தில் ஏதோ ஒரு இதழின் தளங்களை பிடித்தாலும், என் முதல் கதை 'வீரகேசரியின் தோட்ட மஞ்சரி' பகுதியின் 'மதுவேட்டை'. பின் வாரக்கதையாக 'பூரணியும்' வெளிவந்தன.

**உங்களது படைப்புக்களுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் யார்? அவர்களை பின்பற்றி எழுதுகிறீர்களா?**

என் அண்ணா நல்ல பேச்சாளர். அன்றைய இளைஞர் குரல், ஆசிரியர் குழுவிலும் ஒருவராக இருந்தவர். தி. மு. க பற்றால் நிறைய நூல்கள், இலக்கியநூல்களும்தான். அத்துடன் எங்கள் மாமா... கல்கி, விகடன்... அன்றைய காலத்திலே சந்தாதாரராக இருந்தவர். இவரை ஒரு வாசகனாக்கியதே... தலவாக்கலையில் சி.வி வாழ்ந்த காலத்தில்தான். சி.வி யின் நல உரிமைச் சங்கத்தில் இவரும் ஓர் உறுப்பினர். பல இளைஞர்களை வாசகர்களாக்க சி.வி எடுத்த முயற்சியில், அனுமான், தூதன்.., கல்கி..., விகடன்.., இன்னும் பல இந்திய சஞ்சிகைகளை அறிமுகப்படுத்தி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியதுடன்... பல பல நூல்கள் இவர்களின் வீடுகளை வந்தடைந்தன. எனவே... இவைகள் என்னையும் சிறுவனாக இருந்தபோது வாசிக்க தூண்டியது. அந்த வாசிப்பு... என்னை கதை எழுதும் சுவட்டில் கால் பதிய வைத்தது. என்றாலும் கல்கியில் வந்த செந்தூரனின் உரிமை எங்கே என்ற கதையும் அதன் சாயலும்... என் மண்ணின் சிந்தனையை எனக்குள் மேலும் வளர்த்தது. என் 'பூரணி' என்ற முதல் வார சிறுகதை எழுத்தரளர் திரு மு. சிவலிங்கம் அவர்களின் உதவியால் கேசரியில் பிரசுரம் பெற்றது. அத்துடன் தோழர் சுந்தரம், பீக்கிங் கந்தசாமி போன்றவர்கள் என் எழுத்துக்கு புது வழிக் காண்பித்தவர்கள் என்பதை மறக்க முடியாது.

**மலையக படைப்பாளிகளிடம் அண்மைக் காலங்களில் மாற்றங்களை அவதானிக்கிறீர்களா? எத்தகைய மாற்றங்களை?**

தங்களின் சமூக எழுச்சிக்காக, அவல நிலைப்போக்க வர்க்க முரண்பாடாக...எழுதியவர் மத்தியில் இங்கு மாற்று நிலை என்பதை மறக்க முடியாதுதான். தங்களை ரணப் படுத்திக் கொள்ளாமல் அதே நேரம் அடுத்தவர் மனமும் கோணாமல் ஆத்ம சுகமாக எழுதுபவரே அதிகம். இதை எழுதினால் அவர் கோபிப்பாரோ... இவரை பாதிக்குமோ... என்ற பயந்தாங் கொள்ளித்தனம்... இன்று தலை தூக்கி நிற்கிறது.

**கவிதை மாத்திரமன்றி சிறுகதை, ஓவியமென இதர துறைகளிலும் ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். இம்மூன்று துறைகளிலும் எதில் நீங்கள் திருப்தி கொள்கிறீர்கள்? ஏன்?**

சிறுகதை - ஒரு பிரச்சினையை கருவாக எடுத்துக் கொண்டு அதை ஒரு சிறு கதையின் மூலம் ஆழமாகவும் விரிவாகவும் சொல்ல முடியும். இதை வாசிக்கும் போது இது என் நிலைப்பற்றி அல்லது எங்களின் நிலைப்பற்றி சொல்லுகிறது என்பதை வாசிக்கும் மக்களும் நன்கு புரிந்து கொள்வார்கள். எனினும் எனக்கு திருப்தி என்பது இம்மூன்றிலும் உள்ளதுதான்.

**மலையகத்தின் இலக்கிய எதிர்காலம் இருண்மை மிக்கதாக உள்ளது. இக்கூற்றை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

இல்லை. அப்படி ஒரு நிலை இருந்திருந்தால் இந்த குயில் தோப்பின் 'வடம்' கவிதை இதழாக வந்திருக்காது. அறுபதுக்குபின் எழுதத் தொடங்கிய எனது சிறுகதைகள் பல வருடமாகி... இந்த 2002 ல் தானே சாரல் வெளியீட்டகம் மூலம் தொகுப்பாக வெளிவந்தது. அன்று உதிரிகளாக வந்தவை இன்று தொகுப்பாக நூல்களாக வந்து கொண்டிருக்கின்றன. எனவே இன்றைய இளம் படைப்பாளிகளின் இலக்கிய ஆர்வம்,மேலெழுந்து கொண்டிருக்கிறது என்பது ஒரு வளர்ச்சி. ஆனால் கவிதைகளில் இருக்கும் இவ்வளர்ச்சி சிறுகதை, நாவல் போன்றவற்றில் மிகக் குறைவே. எனவே இதை விஸ்திரப்படுத்தும் விருட்சத்தின் விதைகள்... முளைவிட்டிருப்பதை அன்றுபோல் இன்று காணமுடிவதில்லை. அப்படியே சில சிறுகதைகள் வந்தாலும் அவை அன்று விதையோடு இன்று விருட்சமாக நிற்கும் அவைகளின் கதைகளே தவிர... இன்றைய இளம் படைப்பாளிகளில் அதை காண முடியவில்லை. எனவே கவிதை குன்றுகளிலும் கதை தரும் விருட்சங்கள் தோன்ற வேண்டும். எனவே இந்த குன்றின் நிழல் மட்டும் பார்வைக்கு இருள் படர்ந்ததை போலவே தெரியும்.

**'மாடும் வீடும்' கவிதைத் தொகுதிக்கு பிறகு இன்னொரு தொகுதியை வெளிக்கொணர முயற்சிக்க வில்லையே?**

'மாடும் வீடும்', கவிதை தொகுப்பிற்கு பின் மற்றுமொரு கவிதைத் தொகுப்பு வரவில்லைதான். ஆனால் சாரல் வெளியீட்டகத்தின் மூலம் 'மனுஷியம்', என்ற சிறுகதை தொகுப்பு 2002 ல் வெளிவந்திருக்கிறதே.

**புராணங்களில் வரும் கதாபாத்திரங்கள் உங்கள் கவிதைகளில் அடிக்கடி தலைக்காட்டுகின்றன. இந்த உத்தியை கையாள்வதற்கு விசேட காரணங்கள்?**

நல்லா கேட்டீங்க போங்க. எண்பதுகளில் என்று நினைக்கிறேன். ஒரு எம்.பீ மந்திரியாகி அவருக்கொரு பாராட்டுவிழா அந்த விழாவில் கவியரங்கு (பாராட்டு) வேறு அதில் எனக்கும் ஒரு பங்கு. எனக்கு முன்னால் பாடியவர்கள் அந்த தலைவரை உச்சிக்கு ஏற்றி வைத்தார்கள். ஆனால், அவர் காதில் சொல்ல வேண்டியதை அவர்கள் சொல்ல மறக்க... நானோ துரோகமிழைத்த அந்த அரசோடு கைகோர்த்திருக்கும் அவரை நோக்கி

'எங்களுக்காய் குழல்
ஊதிக் கொண்டிருக்கும் கண்ணனே...
நீ இன்று கர்ணனாய் மாறி
துரியோதனருக்கு தோள் கொடுக்கின்றாய்
நாங்களோ இங்கு பஞ்ச... பாண்டவர்கள்...
நாடோ, நிலமோ கேட்கவில்லை
ஒரு வீடாவது
எங்களுக்காய் கேட்டுப்பார்...
.....................................
நீ தருமர்.... அந்த சகுனியிடம்
எங்களை இழந்து - நீ மட்டும்
ஆசனம் தேடிக் கொண்டாய்'.

ஏதோ ஒரு வேகத்தில் நான்... இதை நன்கு புரிந்துக் கொண்டது, அவை இதில் சிலர், வரிகளை வரவேற்றுக்கொண்டதால் தொடர்ந்து அதே நடைகளை (புராணப்பாத்திரங்கள்) கையாளுகின்றேன்.

**எழுத்துக்கள் சமூக மாற்றங்களுக்கு எவ்வாறு பங்களிக்க முடியும்?**

அறுபதுக்கு பின் மலையகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வித்திட்டவர்கள்... இங்கு தோன்றிய படைப்பாளிகள்தான். ஒரு சமூக மாற்றத்தை குறிப்பாக கல்வியின் சீர்கேடுகளை , ஏமாற்று வார்த்தைகளை, மூடநம்பிக்கைகளை, அடிபணிந்து போகும் தன்மை சிறார்களை அந்நிய வீட்டில் வேலைக்கமர்த்துவதை அதனால் ஏற்படும் விபரீதங்கள்... கதை கதையாக கவிதைகளாக எழுதியதால் இங்கு ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது. படைப்பாளிகள்தான் என்பதை மறுக்க முடியாது. தங்களின் உழைப்பின் பெருமையையும் இந்த மக்களின் பெருமையையும் அறியாது வாழ்ந்த மக்களின் பெருமையை உணர வைத்தவர்கள் இந்த படைப்பாளிகள்தான்.

தேயிலை நிழலில் இருந்து - இத்
தேசத்தை சிந்தித்தேன்... என்ற தென்னவனின் கவிதைகளை கொஞ்சம் எடுத்து விரித்தால்... இதன் உண்மை புரியும். சி.வியின் கவிதைகளும் உரைநடையும் இதை மேலும் விளக்கும்.

**எதை கவிதை என்பீர்கள்?**

ஒரு முறை படித்தாலும் ஓராயிரம் முறை மனதிற்குள் கிடந்து எதிரொலித்துக் கொண்டிருக்கிறதே அந்த... அது இடையில் ஆயிரந்தான் படித்தாலும்... அதுமட்டும் மனதில் தனித்து நின்று ஒலித்துக் கொண்டிருக்கிறதே அதே தான்.

**ஒரே விதமான பிரச்சினைகள் குறித்த சில பாணியிலேயே பாடப்பட்டு வாசகர் மத்தியில் சலிப்புக்களை ஏற்படுத்தி இருக்கின்றன. மலையகத்தின் மூத்த படைப்பாளி என்ற வகையில் புதிய படைப்புக்களில் எத்தகைய மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்கள்?**

பிரச்சினைகள் இங்கு தீர்க்கப்படாத ஒன்று. மக்கள் மத்தியை அணுகாமல் தூரநின்றே பார்த்து விட்டு படம் வரையும் நிலையில் இன்றைய இளம் படைப்பாளிகளும் இருக்கக் கூடாது. வேதனை ரேகைகளை அடிப்பட்ட தழும்புகளை தேடிப்பாருங்கள். பூக்களை பறிப்பதை விட வேர்களுக்கு நீர் ஊற்றும் பணி சிறந்தது. அதற்காக மரத்தில் வளரும் புல்லுருவியை வளர்க்க வேண்டுமா? அதை அகற்றும் பணியில் இன்றைய இளம் படைப்பாளிகள் துணிவோடு இருக்க வேண்டும். ஏனென்றால் இன்றைய மலையக இளைஞர்கள் மத்தியில் பலவித சமூக சீர்கேடுகள் தலைதூக்கி நிற்கின்றன. அதை மாற்ற இளம் படைப்பாளிகள் துணிய வேண்டும்.

**1960 களில் மலையக இலக்கியச் சூழல் எப்படி இருந்தது?**

முன்பு நான் சொன்னது போல ஒரு சமூக விடியலுக்காக எழுதத் தொடங்கிய ஒரு படைப்பாளிக் கூட்டம் எழுந்து நின்றது. கைலாசபதி அவர்கள் சொன்னது போல ஈழத்து இலக்கியத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்சிய அவர்களின் பணி கூர்மை அடைந்திருந்தது. எழுத்தாளர்களின் ஒருமித்த ஒன்று கூடல் அடிக்கடி நடந்தது. இன்று அந்நிலை மாறி கோஷ்டி வாதம் நிரம்பி விட்டது. ஒற்றையடி பாதைகள் அங்கங்கே தோன்றிவிட்டன. இதனால் இன்று மலையக இலக்கிய முயற்சிகள் எப்படி நடக்கின்றன என்பதைக்கூட கண்டு கொள்ள முடியவில்லை. அன்றைய முன்னோடிகளான இரா. சிவலிங்கம், செந்தூரன் போன்றவர்கள் பிரசுரமான மலையக படைப்பாளிகளின் படைப்புக்களை விமர்சித்தார்கள். எழுதுங்கள்... நெம்புகோளாக நின்றார்கள். கார் மேகம் போன்றவர்கள் களம் அமைத்துக் கொடுத்தார்கள். ஒரு வேகம் இருந்தது. போட்டிகள் இருந்தன. இதில் 'செய்தி'யின் நாகலிங்கம், 'மலைமுரசு' , க.ப. சிவம் போன்றவர்களின் பங்களிப்பினையும் குறிப்பிட வேண்டும்.

மலையக அனைத்து கவிஞர்களையும் அன்று ஒன்றிணைத்து தொகுப்பான குறிஞ்சிப் பூவையும் அதன் ஈழக்குமார் அவர்களையும் நினைவு கூற வேண்டிய நிலையும் இன்றைய இளைஞர்களுக்கு வேண்டும். தட்டிக் கொடுத்து.... ஒரு பரம்பரை உருவாகி விட்டது என்ற துடிப்பில் மலையக இலக்கியத்தை அறிமுகம் செய்து பலரின் முகத்தையும் வெளிக்கொணர்ந்த அந்த சி.வி. வேலுப்பிள்ளையின் பணி சிறப்பாக இருந்தது. அவரின் கவிதைகளை தமிழாக்கி தந்த சக்தி பாலையா... ஒரு முன்னோடி என்பதை மறக்க முடியுமா! எனவே அப்படியொரு கூட்டுத்தன்மை இன்று இங்கு தோன்றலாம். நல்ல ஆரோக்கியமாக இருக்கும்.

## வடிவங்களின் வதைப்புகள்

விஸ்தரிப்புகள்
இல்லையென்றாலும்
உள்ளத்துள் பகிஷ்கரிப்புகள்
ஏராளம்.........

எம் கதைகளுக்கு
வடிவங்களில்லை
அவ்வளவும்
கருச்சிதைவுகள் போலாயிற்று।

ஆணிவேர்களில்லா
ஆலமரங்கள் போல் தான்
எங்களது
பூட்டன்களும் பூட்டிமார்களும்।

இறுமாப்பு கொள்ளும்
எம்மிதயங்களின்
இருப்பிடங்கள் இன்னமும்
புகைபிடித்த இதயவரை சுவர்கள் போல்
துருப்பிடித்துள்ளது।

ஏளனமாய் பார்த்து
சிரிப்பதற்காகவே
எம் மேலோரால் செதுக்கப்பட்ட
கேலி கூத்து
பொம்மைகளா நாங்கள்।....

கூலிக்கான கூடுகளாய்
எத்தனை வருஷங்கள்
குனிந்து விட்டோம்
எம் வேலிக்கான
தூண்கள், வடிவம் பெற மறுப்பதேன்?.....

பார்வைகள் பிடுங்கப்பட்ட
பாவிகளாய்
பகல் தூக்கத்திலும்
கனவுகளால்
வாழ்க்கை நடத்துகிறோம்।

கோரம் மிகுந்த
கோரிக்கைகள்
கோடிக்கணக்கில் குவித்தும்
பாடையில் போகும் வரை
ஏன் பதில்கள் கிடைப்பதில்லை ?.....

மாரிமுத்து சிவகுமார்
ஹட்டன்

## யதார்த்தம்

கொடி பிடித்தோம்
கோசமிட்டோம்
பதாதைகள் பதித்தோம்.
யதார்த்தம் மறந்து தர்க்கித்தோம்।

குழுக்கள் சேர்த்து
கூக்குரல் கோர்த்து
யாத்திரைகள் செய்தோம்
முகத்திரை மறைத்து.

சுயநலங்கள் சுயரூபம் கொண்டெழ,
கூட்டுடைத்தோம்।
கொதித்தெழுந்து கலவரமிழைத்தோம்.

களம் கடந்து
பதவியல் அமர்ந்ததும்
பாட்டாளி வர்க்கத்தின் பசி மறந்தோம்।


சொகுசு தேர்களும்
குளிரூட்டிய கார்களும் கதகதப்புத் தர...
சொப்பணங்களில் மிதந்தோம்।
தப்பென தெரிந்தும்
தவிர்க்காது தொடர்ந்தோம்.

மேல் நிலை மாறி
கீழ் நிலை அடைந்ததும்
மீளவும் தெறியும்।
எப்போது தெறியுமோ?....
ஏழ்மையின் நிலையும்
எரியும் வயிறும்.

ந.சிவச்சந்திரன்
அட்டாம் விட்டிய

ஒரு படைப்பாளியின் சமுதாய உணர்வு அதன் வளர்ச்சிக்கும் கூர்மைக்குமேற்பத் தன்னை அவரது படைப்புக்களில் வெளிக்காட்டும்.

# துகள் படிந்த பாத்திரங்கள்



இந்தப் பாத்திரங்கள்
மலையக லயங்களில்
முடங்கிக் கிடப்பவை!

சோக்கஸ்குள்ளே ‘(ே)சாகமாய்’
இருப்பதால் இப்பாத்திரங்களுக்கு
தெரியவில்லை
அழுக்குப் போர்வையொன்று
அமிழ்த்திப் பிடித்திருப்பதை

சந்தா சேர்த்து
சம்பளமாய் கொடுத்தும்
பளபளக்க வைக்க யாருமில்லை
கட்சித் தொண்டர்கள் இருந்தும்
கழுவிட யாருமில்லை
இந்த துகள்களை

துளித்துளியாய் வியர்வை
விழுந்து விழுந்து
துருப்பிடித்துப் போனது

இந்திய பாத்திரங்கள்
என்றே இன்னும்
முத்திரையிருப்பதால்

தனக்கென்று ஒரு
தனியிடம் பிடித்துக்கொள்ள
தவிக்கும் பாத்திரங்கள்

நேற்று
உருவெடுத்த களிமண்
சட்டிகள் மு(அ)டங்கிக் கிடக்கும்
இந்த எவர் சில்வர்
தட்டுகளை ஏமாற்றி
இடமதை கைப்பற்றி
கைக்கொட்டி சிரிக்கின்றன.

இவைகள் காத்திரமான
பாத்திரங்கள்
துகள் துடைப்பவர்களை
நம்பியே துருப்பிடித்து போனது.

இராமசந்திரன் தேவந்திரன்
றொசட், ஹாலி-எல

இரண்டாவது வடம் கண்டு உளம் மகிழ்ந்தேன். முதலாவது இதழைவிட உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சற்று முன்னேற்றம் கண்டிருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். கவிதைகள் மட்டுமன்றி கவிதை தொடர்பான கட்டுரைகளும், நேர்காணல்களும், கவிஞன் பதில்கள் என்ற பகுதியும் வளர்ந்து வரும் படைப்பாளிகளுக்கு நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகள் பிரசுரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் அச்சு வேலையில் மேற்பார்வை கவனயீனமாக உள்ளமையை கவனிக்க கூடியதாக இருந்தது. குறை களைந்து மலையக இலக்கியத் தளத்தில் 'வடம்' சிகரமேக வாழ வாழ்த்துகிறேன்.

ஆ. புனிதகலா
வட்டவளை

குயில் தோப்புக்கு.......

போராட்ட முன்றலில் வடம் தந்த உங்களுக்கு வணக்கம்! நீங்கள் மலை மண்ணிலிருந்து கவி வடம் பிடித்து வருவதை பத்திரிகையில் படித்து பரவசம் அடைந்தேன். மலையகத்து இளையவரின் உணர்வுக்கும் படைப்புக்கும் இடம் தரும் வடம் நல்ல எண்ணத்தின் வெளிப்பாடு. முன்பெல்லாம் ஊரில் தேர் இழுக்க வடம் பிடிப்பார்கள் வாருங்கள், நாம் ஊரிழுக்க வடம் பிடிப்போம். நம் ஊரின் நிலை அதுதானே! வடம் பிடிக்க பலம் வேண்டும். பலம் சேர்க்க கரம் வேண்டும். ஓர் கரம் என்ன? இதோ இருக்கிறது என் ஈர் கரமும். எடுத்துக்கொள்ளுங்கள். ஆலோசகனாக மட்டுமல்ல ஆக்கங்களுடன் ஆக்குபவனாகவும் தோழமையுடன் வடம் தடம் பதிக்க வாழ்த்தும் குயில்.

மயில்வாகனம்

இக்காலத்தில் இலக்கியம் என்ற பெயரில் நசிவு இலக்கியங்கள் புற்றீசல்போல் பெருகிவருகையில் வாசிப்பு நடத்த முடியாத அளவு வாழ்வு இயந்திரத்தனமாக கனமாக்கப்பட்டுள்ள நிலையில் "வடம்" இதழ் மிகக் கனதியாக வடிவின் கீற்றுக்களை சுமந்து வெளிவந்திருக்கிறது. வாசித்து யோசிக்க வேண்டிய அவசியத்தை "வடம்" இதழ் இயல்பாகத் தோற்றுவித்திருக்கின்றது. வாழ்வு வாழ்வென்ற பெயரில் எங்கெங்கோ மனிதர்களை இழந்து கொண்டிருக்கையில் வடம் இதழ் மானுடத்தின் வக்கீழாக தன்னை முன்னிருத்த முனைந்திருக்கிறது. எனவே இன்றைய இளைய தலைமுறை எனப்படுவோர் வாசிப்பு பண்பாட்டினை முற்போக்கு திசை எடுத்துச் செல்ல வடம் தார்மீகமாக முனைப்புக்காட்டியுள்ளது. உண்மையான அறிவென்பது தரமானதைத்தேர்வு செய்வதாகும். ஒரு வாசகனின் தேர்வு "வடம்" எனில்...!

வாழ்க வடம் ! வாழ்விற்கு இழுத்துச்செல்க. !

க. விநாயகமூர்த்தி
வெதமுல்லையூர்

## வடம் நிகழ்வுகள்

ஜூலை மாத பௌர்ணமியன்று ஹட்டனில் மேல் கொத்மலைத் திட்டத்திற் கெதிரான கவியரங்கு இடம் பெற்றது. கவிஞர் சிவ. ராஜேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இக்கவியரங்கில் மலையகத்தின் இளங் கவிஞர்கள் பதினொருவர் கலந்துகொண்டனர். ஆழமானதும், வீச்சுமிகுந்ததுமாக காணப்பட்ட அவர்களின் கவிதைகள் மலையகத்தின் விரிவடையும் நவீன கவிதைத் தளத்தை அடையாளப் படுத்தியது.

அன்றைய தினம் வடம் அறிமுக விழாவும் நடைபெற்றது. அறிமுக உரையை பா. மகேந்திரன் ஆற்றினார். கருத்துரை திரு. வரதராஜ் வழங்க, ஏற்புரையை வே. தினகரன் நிகழ்த்தினார்.அத்தோடு மலையக மக்களுக்கான சரியான கவிதை வடிவம் எது? எனும் விவாதத்தை வே. தினகரன் தொடக்கி வைக்க காரசாரமானதும், ஆரோக்கியமானதுமான கருத்துக்கள் பல முன்வைக்கப்பட்டன. அவற்றில், ராகலை பன்னீர், சிவ. ராஜேந்திரன், ஜெ. சற்குருநாதன் போன்றவர்களின் கருத்துக்கள் மலையகம் பற்றிய கவிதைகளின் இன்னொரு கட்டத்திற்கான ஆரம்பப் படிகளாய் அமைந்தன.

இந்நிகழ்வை தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கிளை ஏற்பாடு செய்திருந்தது.

'வடம்' தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இலங்கை தேசிய தொலைக்காட்சியில் ஐ அலைவரிசையில் 16/08/2005 அன்று காலை 10.30 மணி முதல் 11.00 மணி வரை இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் செல்வி துஸ்யந்தினி மோகனதாஸ், வடம் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த இரா. நெல்சன், பா. மகேந்திரன், வே. தினகரன் ஆகியோர் பங்குபற்றினர். இதனை ஏற்பாடு செய்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் M.I. Jafir ற்கு வடம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.


**கடலை, மிக்சர், முறுக்கு**

**போன்ற பொதிசெய்யப்பட்ட உணவுப்**

**பொருட்களை மொத்தமாகவும்**

**சில்லரையாகவும் பெற்றுக்கொள்ள**

**MEDO PRODUCTIONS**

251/10, Upper Street,

Rakwana.

# ஊன்றுகோல்

நைந்து, கிழிந்த
கொங்காணி சாரமாய்
உறுதி வற்றி
வலிக்கிறது வாழ்க்கை।

பொருளாதாரமேந்திய
பாரமிகு கூடை
பணத்துயரை இறக்கிவிடாமல்
தலையில் திணிக்கிறது.

வேறூன்றிய பாறையில்
நீரின்றி செத்துப்போகும்
முருங்கை மர அடியாய்
பல நீட்சியின் நிரந்தரமின்மை
பாதங்களை நடுங்குவிக்கின்றது.



சின்னவன் பிள்ளை மடுவத்தில்
அழும் குரலும்,
பெரியவள் பள்ளியில் அடிவாங்கி
மௌனமாய் அழும் குரலும்
மலைகளெங்கும்
எதிரொலிக்கின்றன.
அவர்களுந்தான் பட்டினி।

இரும்பு கூடையைச்
சுமந்து மலையேறு।
பணிப்பு வாழ்கையால்
விடுவிக்கப்படுகிறது.

நடுங்கவே திராணியற்ற
பாதங்களோடு
மளைப்புடன்
மலையைப் பார்க்கிறாள்.
நடுங்கும் பாதங்களோடு
வலக்கையின் வரிச்சி
மீண்டும் வாழ்க்கைக்காக ஊன்றப்படுகின்றது.

வேதி

# அதிர்ச்சியும் மலைப்பும்

கனெய்க்ஸ் (2003)

நாம் வேண்டுவது அதிர்ச்சியும் மலைப்புமா?
நமக்குக் கேடு செய்யாதோரை நடுநடுக்குவதா?
ஈராக்கின் சனத்தொகையில் ஏறத்தாழ அரைப்பங்கு
பதினான்கு வயதுக்கு உட்பட்டோர்.
உண்மையாகவே நமது இலக்கு
அவர்களை வெருளச் செய்து பயமூட்டுவதா?
நாம் வேண்டுவது அதிர்ச்சியும் மலைப்புமா?
நமது இதயங்களை வெறுப்பாலும்
இரத்த வெறியாலும் நிரப்புவதா?
வீறாப்பும் ஆதிக்கவெறியும்
கொல்வதிற் பெருமையும் கொண்ட
போர்களப் பாடல்களா நாம் வேண்டுவது?
ஆனந்தக் கூச்சல் மேலிட
எதிரியை நொறுக்குவதுபற்றிப்
படையினர் பேசுவதைக் கேட்பதா நாம் வேண்டுவது?
நாம் வேண்டுவது
பச்சைத் துவேஷமும் மீண்டும் மீண்டும்
கொல்லும் வேட்கையுமா?
உனது இதயத்தில் நீ வேண்டுவது அதுவா?
அப்படியானால்...
அவர்களை விட நீ எவ்வகையிலும் மேலானவனா?

KANEIX ஒரு அமெரிக்கக் கவிஞர்
தமிழில் சி. சிவசேகரம்



"குயில்தோப்பு"
**கலை இலக்கிய ஒன்றியம்**
**காவத்தை**